பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 10 2024 **TUESDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி தொடர்ந்து தீவிரமாக செயலாற்ற உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மதுவிலக்கை அமல்படுத்துவது மாநில அரசுகளின் பொறுப்பு என மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.
- விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- தமிழகத்தில் நெசவாளர்களின் நலன்களைக் காக்கும் நோக்கில் மாநில அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறித் துறை அமைச்சர் திரு ஆர். காந்தி தெரிவித்துள்ளார்.
- தேசிய மகளிர் சீனியர் கால்பந்து போட்டியில் தமிழக அணி 3-1 என்ற கோல் கணக்கில் கேரளாவை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி தொடர்ந்து தீவிரமாக செயலாற்ற தாம் உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு பதவியில் தலைமை பொறுப்பேற்று 23 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதனை தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் 13 ஆண்டுகள் முதலமைச்சராக தாம் பதவி வகித்தபோது, அம்மாநிலம் சவால்களை தாண்டி மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியதாக அவர் கூறியுள்ளார்.

2014-ஆம் ஆண்டு பிரதமராக தாம் பதவியேற்றபின் நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் உலகளாவிய சவால்களுக்கு இடையில் இந்தியா அதிக வளர்ச்சியை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

25 கோடி மக்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டுள்ளதாகவும், உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயர்ந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள் போன்றவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள், பெண்கள், இளையோர் மற்றும் ஏழைகள் நலனில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 23 ஆண்டுகளில் கற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் நாட்டுக்காக மேலும் பணியாற்ற தாம் தயாராக உள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக அரசு மது விற்பனையை ஊக்குவிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கன்னியாகுமரி மற்றும் நெல்லை மாவட்டங்களில் பிஜேபி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றார்.

முன்னதாக, நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுவிலக்கை அமல்படுத்துவது மாநில அரசுகளின் பொறுப்பு என்றார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

விமானப்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

விமானப்படையின் 92-ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் தாம்பரம் விமானப்படை விமான தளத்தில், விமான சாகச நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதில் விமானப்படையின் 72 விமானங்கள் பங்கேற்கின்றன.

<<<<<<>>>>>>

சென்னையில் 46 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு பூங்காவை முதலமைச்சர் திரு முக.ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சுமார் ஆறு ஏக்கர் பரப்பளவில் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பூங்காவை பார்வையிட பெரியவர்களுக்கு 100 ரூபாயும், சிறுவர்களுக்கு 50 ரூபாயும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசுமை குகை, அயல்நாட்டு பறவைகள் கொண்ட பறவையகம், இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் நெசவாளர்களின் நலன்களைக் காக்கும் நோக்கில் மாநில அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறித் துறை அமைச்சர் திரு ஆர். காந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கைத்தறி நெசவாளர்கள் நலன் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் இடம்பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஆயிரத்து 114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 2 லட்சத்து 59 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெசவாளர் முத்ரா திட்டத்தின்கீழ், நெசவாளர்களுக்கு கடன் வழங்குதல், கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்தில் வீடுகட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் 55 ஆயிரம் பேருக்கு ஆண்டுதோறும் தொடர் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு நாசர் கூறியுள்ளார்.

இதுதொடர்பான ஆய்வுக்கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய இடங்களாக 133 இடங்கள் கண்டறியப்பட்டு, கூடுதல் கண்காணிப்புப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னையில் நடைபெற்ற விமானப்படையின் வான் சாகச நிகழ்ச்சியின்போது பார்வையாளர்கள் ஐந்து பேர் உயிரிழந்த சம்பவத்தை பிஜேபி அரசியலாக்கவில்லை என் அக்கட்சியின் மாநில ஒருங்கிணைப்பு குழு தலைவர் திரு ஹெச் ராஜா கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் தவறை சுட்டிக்காட்டியிருப்பதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தேசிய போதைப்பொருள் தடுப்பு அமைப்புதான் இதுவரை நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் திரு ஹெச் ராஜா கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் பிற மாவட்டங்களில் சில இடங்களில் லேசானது முதல், மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதகா தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, திருச்சி, திண்டுக்கல், உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று அதிகாலை பரவலாக மழை பெய்தது.

இந்நிலையில், திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக கொடைக்கானலில் அடுக்கம் பெரியகுளம் செல்லும் சாலையில், பாறைகள் உருண்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் -ராஜேசேகரன் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

எத்தியோப்பியாவின் வெளியுறவு அமைச்சர் திரு டேய் அட்ஸ்கே செலாசியை, புதிய அதிபராக அந்நாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேர்வு செய்துள்ளன.

------------------------------------

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிரீமியா எண்ணெய்க் கிடங்கின் மீது உக்ரைன் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

--------------------------

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் நாட்டில் 15 கோடி குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளாக மத்திய ஜல்சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------------------

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே வணிகவரித்துறை சார்பில், இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய உதவி ஆணையர் அலுவலகத்திற்கு மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்.

----------------

கன்னியாகுமரியில் பேரிடர் மேலாண்மை மையத்தை மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா ஆய்வு செய்தார்.

-----------------------

வன உயிரின வார விழாவை முன்னிட்டு, ராமநாதபுரத்தில் வன உயிரின விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சியர் சிம்ரத் சிங் காலோன் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

-----------------------------

தேனி மாவட்டம் உப்புத்துறையில் நாளை, மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா கூறியுள்ளார்.

---------------------------------

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே காவலன் செயலி குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு காவல் துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

------------------------------------

நீலகிரி வரையாடு தினத்தையொட்டி முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் முக்குர்த்தி தேசிய பூங்கா சார்பில் மஞ்சூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, வினாடி வினா ஆகிய விழிப்புணர்வு போட்டிகள் நடைபெற்றன

-----------------------------------

சென்னை மெட்ரோ ரயிலில் இதற்கு முன்பு இல்லாத அதிக அளவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 4 லட்சம் பேர் பயணித்துள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய மகளிர் சீனியர் கால்பந்து போட்டியில் தமிழக அணி, கேரளாவை வென்றது.

கேரளாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில், 3-1 என்ற கோல் கணக்கில் தமிழக அணி வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் கோவா அணி - இமாச்சலப்பிரதேச அணியை வென்றது.

<<<<<<END>>>>>>